நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

எஸ்.டி.சி. 303 /2024

தமிழ்செல்வன், உரிமையாளர்

ஸ்ரீகுருதெட்சிணாமூர்த்தி டிரேடர்ஸ்

த/பெ. கோவிந்தசாமி. ... புகார்தாரர்

எதிர்

ராமகிருஷ்ணன்

த/பெ. ஸ்ரீனிவாசன் .. எதிரி

புகார்தாரரின் சத்தியபிரமாண வாக்குமூலம் ( Sworn Statement)

நான் தமிழ்செல்வன், த/பெ. கோவிந்தசாமி, 3/174 ஏ, ஆசியா நகர், திருவாரூர் விலாசத்தில் வசிக்கும் நான் சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவது யாதெனில்,

எதிரி எனக்கு வியாபார நண்பர் ஆவர். எதிரி அவரது வியாபாரம் சம்பந்தமாக 03.02.2023 ம் தேதி ரூ.5 லட்சமும், 01.03.2023 ம் தேதி ரூ.5 லட்சமும், 16.03.2023 ம் தேதி ரூ.5 லட்சமும், 27.03.2023 ம் தேதி ரூ.5 லட்சமும், 03.06.2023 ம் தேதி ரூ.6 லட்சமும், 28.04.2023 ம் தேதி ரூ.2 லட்சமும், 13.05.2023 ம் தேதி ரூ. 2 லட்சம் ஆக ஏழு தவணைகளில் என்னிடம் ரூ.30,00,000/- கைமாற்று கடனாக பெற்றார். மேற்படி தொகையை எதிரியிடம் திரும்ப செலுத்த கேட்டபோது 02.04.2024 ம் தேதியிட்ட ரூ.30 லட்சத்திற்கான காசோலையை (காசோலை எண்.000168, பேங்க் ஆப் பரோடா திருவாரூர் கிளை) திருவாரூரில் உள்ள எனது அலுவலகத்தில் வைத்து கொடுத்தார். அந்த காசோலையை நான் அன்றைய தினமே எனது வங்கி கணக்குள்ள பேங்க் ஆப் பரோடா திருவாரூர் கிளையில் வசூலுக்கு போட்டேன். மேற்படி காசோலையானது அன்றைய தினமே எதிரியின் வங்கி கணக்கு முடிக்கப்பட்டுவிட்டதாக திருப்பப்பட்டுவிட்டது.

13.04.2024 ம் தேதி எனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பினேன். எதிரி மேற்படி அறிவிப்பை 20.03.2024 ம் தேதி வாங்கிக்கொண்டார். அதற்கு 13.05.2024 ம் தேதியன்று எதிரி பதில் அறிவிப்பு அனுப்பினார். எனவே காசோலை மோசடி குற்றத்திற்காக வழக்கு எதிரி மீது வழக்கு பதிவு செய்து சட்டப்படி தண்டிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- பெ. மகேந்திரவர்மா,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**